PRIVATE CIRCULATION ONLY

SPECIAL EDITION

# TNRBA

TAMIL NADU RAJPUT BONDIL ASSOCIATION (Reg. No 10/2019)

TNRBA * NEWSLETTER * செய்தி மடல்



## RAJA DESINGH's 328th BIRTHDAY SPECIAL

ராஜா தேசிங் 328 வது பிறந்த நாள் சிறப்பிதழ்

27.04.2021

/ TNRBA   / TNRBA   / TNRBA

அன்புடையீர்,

அனைவருக்கும் செஞ்சி ராஜா தேசிங் அவர்களின் 328 வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

நம்முடைய வம்சத்தின் குல விளக்கு. செஞ்சியை ஆண்ட மாவீரன் ராஜா தேசிங் அவர்களின் பிறந்த நாள் விழா காணும் இந்த நாளில், கொரோனாவின் இரண்டாவது அலையின் தாக்கம் காரணமாக இளைஞர் அணியின் சார்பாக மாநில அளவில் வெகு விமர்சையாக நடைபெறுவதாக இருந்த ராஜா தேசிங் பிறந்த நாள் விழா செஞ்சியில் திட்டமிட்ட படி சிறப்பாக கொண்டாட இயலவில்லை.

அதே சமயம், செஞ்சிக்கு அருகாமையில் உள்ள கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த, நம் சங்கநிர்வாகிகள் மற்றும் சொந்தங்கள் கடலியிலுள்ள ராஜா தேசிங் நினைவிடம் சென்று, மாநில அரசின் வழிகாட்டுதலின் படி முக கவசம் அணிந்தும், சமூக இடைவெளியை கடைபிடித்தும், ராஜா தேசிங்கிற்கு மரியாதை செலுத்த ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பிற மாவட்டங்களிலிருந்து பெரும் திரளாக வந்து, உற்சாகமாக கலந்து கொள்ளும் சொந்தங்களின் வழக்கமான நிகழ்வு இந்தமுறை கொரோனவின் காரணங்களால் தவிர்க்கப் படுகிறது.

நம்முடைய சமுதாய மக்கள் அனைவரும் அவர் அவர் இல்லங்களில், ராஜா தேசிங் திருவுருப் படத்திற்கு மலர்மாலை சூட்ட வேண்டும் என்று அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

மிகவும் உற்சாகத்துடன், ஆன் லைன் வாயிலாக பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரை போட்டியில் கலந்துக் கொண்ட நம் மாணவ, மாணவி செல்வங்களுக்கு, அதற்கான சான்றிதழ்கள் அவர்கள் முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

விழாவை சிறப்பாக கொண்டாட முயற்சிகள் எடுத்தமைக்கும், செயல் திட்டங்களை வகுத்தமைக்கும் தமிழ் நாடு ராஜ்புத் சங்க இளைஞர் அணியினருக்கு நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய நன்னாளில் நமது சமுதாயத்தில் உள்ள அனைத்து சகோதரர்கள், சகோதரிகள் அனைவரும். ஒற்றுமையுடன் ஒருங்கிணைந்து சமுதாய பணிகளை தொடர்ந்து பணியாற்றிட வேண்டும் என்றும். நம்முடைய கனவுகள் நனவாக பாடு பட வேண்டும் என்றும் பணிவோடு கேட்டு கொள்கிறேன்.

ராஜா தேசிங் பிறந்தநாள் சிறப்பிதழை வெளியிட முயற்சிகள் மேற்கொண்ட மின் இதழ் குழுவுக்கு நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!

வாழ்க ராஜா தேசிங் !

வளர்க ராஜா தேசிங்புகழ்!!



இப்படிக்கு,

டாக்டர் G..பவானி சிங்

தலைவர் – தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்.

## TRIBUTE TO RAJA DESINGH TO DAY (27.04.2021) ON HIS 328th BIRTH DAY AT KADALI, GINGEE

தலைமை சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, கடலூர் மாவட்ட தலைவர் திரு.S.ராஜேஷ் சிங் அவர்கள் தலைமையில், விழுப்புரம் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் திரு. ஜெயராம் சிங் மற்றும் அவரது குடும்பத்தார் முன்னிலையில், விழுப்புரம் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் திரு.ஜெய் சிங், விழுப்புரம் மாவட்ட இளைஞர் அணி தலைவர் திரு.தேசிங் குடும்பத்தார், மாநில தலைமை நிலைய செயலாளர் திரு.K.ஜஷ்வந்த் சிங் ஆகியோர் நம் குலவிளக்கு ராஜா தேசிங்கின் 328 வது பிறந்தநாளை முன்னிட்டு, சிங்கவரம் கோவிலில் அர்ச்சனை செய்து விட்டு, செஞ்சியை அடுத்த கடலியில் அமைந்துள்ள ராஜா தேசிங் நினைவிடம் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம். அனைவருக்கும் உணவளித்து உபசரித்த திரு.ஜெய் சிங் குடும்பத்தார்க்கும், திரு.தேசிங் குடும்பத்தார்க்கும், தமிழ் நாடு ராஜ்புத் சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.





ராஜா தேசிங்கிற்கு அவரது 328 வது பிறந்த நாளில் (27.04.2021), அவரது நினைவிடம் கடலி, செஞ்சியில் மரியாதை செலுத்தப்பட்டது

## TRIBUTE TO RAJA DESINGH TO DAY (27.04.2021) ON HIS 328th BIRTH DAY AT KADALI, GINGEE



ராஜா தேசிங்கிற்கு அவரது 328 வது பிறந்த நாளில் (27.04.2021), அவரது நினைவிடம் கடலி, செஞ்சியில் மரியாதை செலுத்தப்பட்டது

# HISTORY OF GINGEE KING RAJA DESINGH

## ராஜா தேசிங்கின் வரலாறு

செஞ்சிக்கு புகழ் வரக் காரணமாக இருந்தவர் ராஜா தேசிங்கு. இவரைப்பற்றி எண்ணற்ற நாட்டுப்புற பாடல்களும், கதைகளும் உண்டு. தமிழகத்தில் அந்நிய ஆட்சிக்கு எதிராக முதல் குரல் கொடுத்த வீரன் ராஜா தேசிங்கு.

இராஜா தேசிங்கு அல்லது இராஜா தேஜசிங் என்பவர் சொரூப்சிங்கின் வீரமகன் ஆவார். பொந்தில் ராஜ்புத் வம்சாவளியான இவர் கி.பி. 1714 ம் ஆண்டில் செஞ்சியை ஆட்சி செய்தார்.

மராத்தியர்கள் சிவாஜி தலைமையின் கீழ் வீறுக்கொண்டு எழுந்து அவுரங்கசீப்பிற்கு குடைச்சல் கொடுத்து பெரிய சாம்ராஜ்யத்தினை நிறுவ முயன்றார்கள் அப்பொழுது மராத்தாவிலிருந்து, கொங்கன் கடற்கரை வழியாக கர்நாடகம், தமிழகம் என படை எடுத்து தங்கள் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தனர்.

மராத்தியர்களை அழிக்க வேண்டும் என்று அவர்கள் செல்லும் இடம் எல்லாம் பின் தொடர்ந்து படைகளை அனுப்பி கொண்டு இருந்தார் அவுரங்கசீப்.. இதற்கிடையே சிவாஜி மறைந்து விட அவரது மகன் ராஜாராம் தொடர்ந்து போரிட்டார் ஆனலும் ஒரு நிலைக்கு மேல் சமாளிக்க இயலாமல் தமிழகத்திற்கு தப்பி வந்து செஞ்சிக் கோட்டையில் பதுங்கினார். அவரைப்பிடிக்க பெரும் படையை அவுரங்கசீப் முகமூத்கான் என்பவர் தலைமையில் அனுப்பினார்.

முகமூத்கானினின் படையில் குதிரைப்படை தலைவராக இருந்தவர் சொரூப்சிங். 11 மாத கால முற்றுகைக்கு பின்னர் கோட்டையை அவுரங்கசீப்பின் படைக் கைப்பற்றியது, போரில் தீரத்துடன் செயல்பட்டதால் சொரூப்சிங்கின் வசம் கோட்டையை ஒப்படைத்து, அந்த பகுதியினை நிர்வகித்து வர சொல்லிவிட்டார் அவுரங்கசீப்.

சொரூப்சிங் அவரது மனைவி ரமாபாய் அவர்களுக்கு பிறந்த வீரன் தான் தேசிங்கு.

இதற்கிடையே அவுரங்கசீப்பும் மறைய ஷாஆலம் என்பவர் தில்லி சுல்தான் ஆனார். ஷாஆலம் வாங்கிய நீலவேணி என்ற புதிய முரட்டு குதிரையை யாராலும் அடக்க இயலவில்லை எனவே குதிரை ஓட்டுவதில் வல்லவர் ஆன சொரூப் சிங்கை தில்லி வர சொன்னார் சுல்தான். அந்த குதிரையை அடக்க முடியாத காரணம் காட்டி அவர் சிறை வைக்கப்பட்டார். இதை அறிந்த தேசிங்கு தனது 15 வது வயதில் டெல்லி சென்று தந்தையால் குதிரையை அடக்க இயலவில்லை எனவே தனக்கு ஒரு வாய்ப்பு அளித்துப் பார்க்க சொல்லி சுல்தானிடம் முறை இட்டான், வாய்ப்பளிக்கப்பட்டது

அனைவரும் வியக்கும் வண்ணம் அக்குதிரையை அடக்கி சவாரி செய்துக் காட்டினான். தேசிங்கின் வீரத்தைப் பாராட்டி தனது சேனை தலைவர் பீம் சிங் மகள் ராணி பாய் என்ற பெண்ணை, தேஜஸ் சிங்கிற்கு திருமணம் செய்து வைத்து, சொரூப் சிங்கை விடுவித்தார். கூடவே நீலவேணி குதிரையையும் பரிசாக அளித்தார்.

சொரூப் சிங் இறக்கும் போது டெல்லி அரசுக்கு செலுத்தவேண்டிய 70 லட்சம் ரூபாயை செலுத்தாதலால், தேசிங் முடிசூட்டிக் கொள்வதை பாதுஷாவின் பிரதான தளபதி ஆற்காடு நவாப் எதிர்த்தார்.

# HISTORY OF GINGEE KING RAJA DESINGH

## ராஜா தேசிங்கின் வரலாறு

தனது பரம்பரை உரிமையை விட்டுக் கொடுக்காத தேசிங்கு தனக்கு தானே முடிசூடிக் கொண்டார். அவரது தந்தையின் நண்பன் முகமதுகான் அதற்கு ஆதரவாக நின்றார். இதனால் ஆற்காடு நவாப் சதயத் உல்லாகானுக்கும், ராஜா தேசிங்குக்கும் உரசல் ஏற்பட்டது. கப்ப தொகையை கேட்ட நவாப்பிடம் கப்பம் செலுத்த முடியாது என கூறியதால் போர் மூளும் அபாயம் ஏற்பட்டது.

முகமது கான் தனது திருமணத்திற்காக வழுதாவூர் சென்றிருந்தார். இந்த நேரத்தில் போர் தொடுத்தால் தேசிங்கு அடிபணிய வாய்ப்புண்டு என்று எண்ணிய நவாப், போர் அறிவித்து செஞ்சி கோட்டையை முற்றுகையிட்டார். இதை அறிந்த முகமது கான் தன் திருமணத்தை நிறுத்திவிட்டு, தேசிங்கின் படை தளபதியாக போரிட்டு வென்று தனது படையுடன் திரும்பிக் கொண்டிருந்த போது, மறைந்திருந்த ஒருவனால் குறுவாளால் குத்திக் கொல்லப்பட்டார்.

இதை அறிந்த தேசிங்கு ராஜா தானே போர்களத்திற்கு வந்தார். அப்போது பீரங்கி குண்டுகள் பொழிய நடந்த போரில், நீலவேணி குதிரை கால்கள் வெட்டப்பட்டு கொல்லப்பட்டது. தன்னை எப்படியும் சுட்டு கொன்று விடுவார்கள் என கருதி ராஜா தேசிங்கு, செஞ்சி அருகே கடலி கிராமத்தில் தன் வாளை வானத்தில் எறிந்து மார்பை காட்டி வீர மரணம் அடைந்தார். அவரது மரணம் 03.10.1714 அன்று நடந்ததாக சொல்கிறது வரலாற்று ஆய்வேடு. அப்போது ராஜா தேசிங்கிற்கு வயது 18. இதை அறிந்த ராணி பாய் உடன் கட்டை ஏறி விட்டார்.

வீர மரணம் அடைந்த ராஜா தேசிங்கின் உடலை அப்படியே விட்டு செல்லாத ஆற்காடு நவாப் சதயத் உல்லாகான் செஞ்சிக்கு கொண்டு வந்து அரசு மரியாதையுடன் அடக்கம் செய்தார்.

தேசிங் ராஜாவின் வீரம் மற்றும் அவரது மனைவி ராணிபாயின் பக்திக்கு மரியாதை நிமித்தமாக, ஆற்காடு நவாப் பாலாற்றின் வடக்கு கரையில் ஆற்காடுக்கு எதிரே ஒரு புதிய கிராமத்தை உருவாக்கி அதற்கு ராணிபேட் என்று பெயரிட்டார்.

செஞ்சி அருகில் 3 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது சிங்கவரம் கிராமம். சிங்கவரம் அருள்மிகு அரங்கநாதஸ்வாமி ஆலயம் மிகப்பழமை வாய்ந்தது. அரங்கன் தான் தேசிங்கு ராஜாவின் தெய்வம், எந்த வேலைச்செய்தாலும் இந்த அரங்கனிடம் சொல்லிவிட்டு தான் செய்வாராம்.தேசிங்கு ராஜன் தன் செஞ்சிக்கோட்டை அரண்மனையிலிருந்தே அந்தக் கோயிலுக்குச்செல்ல சுரங்கப்பாதை அமைத்தாராம். அவனது ராணியும் மற்றத்தோழிகளும் பாதுக்காப்பாகச் செல்லவும் இந்தச்சுரங்கம் உதவப்பட்டது.

செஞ்சியை ஆண்ட மாவீரன் தேசிங்கு ராஜன், ஆர்க்காடு நவாப்பின் படைகளுடன் போரிட தன் குல தெய்வமான இந்த ஸ்ரீஅரங்கநாதரிடம் அனுமதி கேட்டபோது அரங்கன், இன்று போருக்குச் செல்ல வேண்டாம். நாளை செல்" என்று கூறினாராம். தேசிங்கோ, எதிரியின் படைகள் எல்லையை அடைந்துவிட்டதே முன் வைத்த காலை பின் வைக்க மாட்டேன். இன்றே செல்லட்டுமா ? என்று கேட்டாராம்.

# HISTORY OF GINGEE KING RAJA DESINGH

## ராஜா தேசிங்கின் வரலாறு

இதைக் கேட்ட அரங்கன் தலையைத் திருப்பிக் கொண்டதாகக் கூறுகிறார்கள். இப்போதும் ரங்கநாதர், முகம் திரும்பிய நிலையில் இருப்பதைக் காணலாம்.

தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம், ராஜா தேசிங், ராணி பாய் அவர்களின் வீரம் மற்றும் தியாகத்தை போற்றும் வகையிலும், வருங்கால சந்ததியினர் அவர்கள் வரலாற்றை அறியும் வகையிலும், ராஜா தேசிங்கிற்கு செஞ்சியில் நினைவு மண்டபம் மற்றும் வெண்கல சிலையையும், ராணிபாய் நினைவாக ராணிபேட்டையில் நினைவு மண்டபம் மற்றும் வெண்கல சிலை வைக்கவும் மத்திய, மாநில அரசுகளுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது. நமது சமுதாய மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒறுங்கிணைந்து செயல்பட்டு நம்முடைய கனவுகள் நனவாக பாடு படுவோம்

ஒன்று படுவோம் வெற்றி பெறுவோம்....

வாழ்க ராஜா தேசிங் !
வளர்க ராஜா தேசிங் புகழ் !!

தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்,



**RAJA DESIGH**

Wife: Rani Bai

Father : Swarup Singh

Mother : Rama Bai

Born : 27.04.1693

Died : 03.10.1714

Place of last breath : Kadali, near Gingee

Ruler of Gingee Kingdom : 1712 - 1714

## KNOW ABOUT RANIPET

Ranipet was built around the year 1771 by Sadut-ulla-khan, the Nawab of Arcot, in honor of the youthful widow of Desingh Raja of Gingee, who committed Sati upon her husband's death. Out of respect for Desingh Raja's valour and his wife's devotion, the Nawab formed a new village opposite to Arcot on the Northern bank of Palar river and named it Ranipet.

The town gained importance since the establishment of European contonment. About a mile west of Ranipet is a remarkable thope extending along the Palar river, for a distance of 4.8 Km which is known as 'Navlakh Bagh'. It is supposed to contain 9 lakhs of trees and hence the name "Navlakh Bagh". South India's first rail was operated between Royapuram to Ranipet.

On August 15, 2019, Ranipet became the district headquarters for the Ranipet district after announcement of the newly created district. The District has been formally inaugurated and started functioning from 28th November, 2019, then by becoming the 36th District of Tamil Nadu.

# HISTORY OF GINGEE FORT
# செஞ்சி கோட்டை வரலாறு

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மாநில தலைநகரான சென்னையில் இருந்து 160 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இது இந்தியாவில் உள்ள எவரும் அவ்வளவு எளிதில் நுழைய முடியாத கோட்டைகளில் மிக சிறந்தது என்பார் மராட்டிய மன்னர் சிவாஜி. பிரிடிஷ் ஆட்சியாளர்கள் இதனை, கிழக்கின் ட்ராய் என்றனர். சோழர்களால் சிங்கவர நாடு என்றும், 1614ல் வாழ்ந்த கிண்ட் என்பவர் ஐரோப்பாவில் உள்ள ஆன்ஷ்ற்றான் மலை போல் உள்ளது என்பார்.



விஜய நகர ஹிந்து அரசர்கள், நாயக்க மன்னர்கள், பீஜப்பூரின் முஸ்லிம் அரசர்கள், 1750ல் பிரஞ்சு காரர்களும் செஞ்சியை ஆட்சி செய்து இருந்தாலும். 1714 ஜனவரி முதல் 1714 அக்டோபர் வரை, வெறும் பத்து மாதங்கள் ஆட்சி செய்த தேசிங்கு ராஜா புகழ் மட்டும் இன்றும் பரவியுள்ளது ஆச்சரியம் தான். 14ம் நூற்றாண்டின் இறுதியில், பெரிய தீபகற்ப நகரங்களில் ஒன்றாக செஞ்சி உள்ளது. காஞ்சிபுரத்தை போன்று செஞ்சியும் இரு பெரும் பிரிவாக பிரிந்துள்ளது. தற்போதைய செஞ்சி, சிவ செஞ்சி என்றும், சிங்கபுரம் மேலச்சேரி இணைந்திருந்த பகுதியை விஷ்ணு செஞ்சி என்றும் அழைக்கப்பட்டதாக கல்வெட்டுகள் கூறுகின்றன.

ஆரம்பத்தில் செஞ்சி கோட்டையை கட்டியது. செஞ்சியர் கோன் காடவ மன்னன் கட்டியதாகவும் இடையர் குலத்தை சார்ந்த அனந்த கோன் கட்டியதாகவும் இரு வேறு கருத்துகள் உள்ளன. செஞ்சியின் இரண்டு நூற்றாண்டு வரலாற்றை கூறும் மெக்கல் சீ சுவடி தொகுப்புகளில், இது தொடர்பான பல தகவல்கள் உள்ளன. இந்த கோட்டையில் உள்ள கோவில்கள், மண்டபங்கள், குளங்கள், அணைகள், படை வீரர்கள் தங்கும் பகுதி, நெற் களஞ்சியம், எதிரிகள் எளிதில் கடக்கமுடியாத ஆழமான மற்றும் அகலமான அகழிகள் போன்றவை தென்னிந்திய



மன்னர்களுக்கு கட்டிட கலையில் இருந்த ஆர்வத்தை வெளிபடுத்துகிறது.

செஞ்சி பல போர்களை சந்தித்த பிறகும், இன்னும் கம்பீரமாக காட்சியளிகிறது. சோழர் காலத்தில் செஞ்சிக்கு பெயர் சிங்கபுரி என்றும் சிங்கபுரி கூட்டம் என்றும் அழைக்கப்பட்டது. அதுவே, பின்னாளில் செஞ்சியாகிவிட்டது. இப்பொழுதும் செஞ்சிக்கு அருகே சிங்கவரம் என்ற ஊர் உள்ளது. தமிழக வரலாற்றில் செஞ்சிக்கு முக்கியமான ஒரு இடம் உண்டு. மேற்கு தமிழகத்தில், வலிமையான கோட்டை கொத்தளம் உடைய அரசியல் களம் என்றால் அது செஞ்சி தான். வேலூர் கோட்டைகள் கட்டுவதற்கு முன்னரே, கோட்டையுடன் வலிமையாக திகழ்ந்த ஊர் செஞ்சி.

# HISTORY OF GINGEE FORT

# செஞ்சி கோட்டை வரலாறு




சிங்கவரம்: செஞ்சியில் இருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இது பல்லவர் காலத்தில் சிங்கவர நாட்டின்தலைநகராக இருந்தது. முதலாம்மகேந்திர வர்மனின் தந்தை சிம்ம விஷ்ணுவின் காலத்தில் இந்த நகரம் ஏற்பட்டு இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. இங்குள்ள அரங்கநாத சுவாமி கோவில் மிக பழமையானது. இது செஞ்சிக்கு வடக்கே 5 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இக்கோவிலுக்கு செல்ல 125 படிகளை கடந்து செல்ல வேண்டும். எல்லோரா போல் ஒரே கல்லில் குடைந்து செய்யப்பட்டது இந்த கோவில். இங்குள்ள பெருமாளின் திருமேனியை ஒரே கல்லில் குடைந்து வடிவமைத்துள்ளனர்.

அரங்கநாதர் கோவிலுக்கு செஞ்சி அரச குடும்பத்தினர் வருவதற்காக, செஞ்சி கோட்டையில் இருந்து இக்கோவிலுக்கு சுரங்கம் ஒன்றும் உள்ளது. சில படையெடுப்பின் போது, காஞ்சிபுரத்தில் உள்ள வரதராஜ மூர்த்தியை சிறிது காலம், தேசிங்கு ராஜா பாதுகாப்பில், சிங்கவரம் ரெங்கநாத ஆலயத்தில் வைத்திருந்தனர். பின்னர் காஞ்சியில் அமைதி திரும்பியதும், மீண்டும் எடுத்து செல்லப்பட்டதாக வரலாறு கூறுகிறது. செஞ்சியின் அடுத்த சிறப்பு மண்டக பட்டு, இங்குள்ள குடவயர் கோவில் மிக பழமையானது. செஞ்சியில் இருந்து 17 கிலோமீட்டர் தொலைவில் இந்த ஊர் உள்ளது. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திர வர்மனால் கட்டப்பட்ட முதல் குகை கோவில் இது தான்.

தளவானூர்: செஞ்சியில் இருந்து சுமார் 15 கிலோமீட்டர் தூரத்தில் இந்த ஊர் உள்ளது. பல்லவர்



காலத்தில் கட்டப்பட்ட மல்லேஷ்வர் கோவில் இங்கு தான் உள்ளது. இது மட்டுமின்றி செஞ்சியை சுற்றிலும், பழமையான புனித திருத்தலங்கள் உள்ளன. அதன் வரிசையில் செஞ்சியில் இருந்து 18 கிலோமீட்டர் தூரத்தில், அனந்தபுரம் மலை மீது சிவன் கோவில் அமைந்துள்ளது. மாமல்லபுரத்து கடற்கரை கோவிலையும், காஞ்சி கைலாசநாதர் கோவிலையும் கட்டிய பல்லவ மாமன்னன் ராஜ சிம்மனால் இக்கோவில் கட்டப்பட்டுள்ளது. சமணர்களின் முக்கியத்துவம் வாய்ந்த 24

தீர்தங்காரர்களின் படைப்பு சிற்பம், மிகப்பெரிய கூம்பு வடிவ பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. ஒரே இடத்தில் 24 தீர்தங்காரர்களுக்கும் சிலைகள் இருப்பது இந்தியாவில் வேறெங்கும் காணமுடியாத அற்புத காட்சி.

செஞ்சியின் சிங்கபுரத்துக்கு மேற்கே சுமார் 1 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பழமையான கிராமம் மேலச்சேரி. அக்காலத்தில் செஞ்சி நகரம் இவ்வூர் வரை பரவி இருந்தது. ஆகவே இதற்கு பழைய செஞ்சி என்ற மற்றொரு பெயரும்உண்டு. இவ்வூருக்கு வடக்கே உள்ள சிறிய குன்றின் மேல் முருகன் கோவில் ஒன்றும் உள்ளது. மேலும் புகழ்வாய்ந்த பாஞ்சாளியம்மன் கோவிலும் உள்ளது. இந்த மலையில், கொல்லி மலையில் கிடைக்காத பல அறியமூலிகைகள் கிடைப்பதாகவும் சொல்லபடுகிறது.

Courtesy The Secret of Un known
by R Annagurunathan

அன்பு உறவுகளே !

நம் சங்கம், நம் தலைவர் Dr.G.பவானி சிங் அவர்களின் தலைமையின் கீழ் செயல் பட துவங்கியதிலிருந்து, நம் குலவிளக்கு ராஜா தேசிங்கிற்கு தொடர் மரியாதை அளிக்கும் விசயத்தில் ஆகட்டும், ராஜா தேசிங்கிற்கும், ராணி பாய்க்கும் நினைவிடம் மற்றும், வெண்கல திருவுருவ சிலை அமைக்கும் முயற்ச்சியிலும் ஆகட்டும், தொடர் அக்கறை மற்றும் ஆட்சியாளர்களிடம் தொடர்ச்சியான பின் தொடர்தலையும் செய்து வருகிறது. நம் வெற்றி இலக்கை அடையும் வரை உங்கள் அனைவரது ஆதரவு மற்றும் ஒத்துழைப்புடன் நம் முயற்ச்சிகள் தொடரும் என்று உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ராஜா தேசிங்கின் பிறந்த நாளான இன்று அவருக்கு மரியாதை செலுத்திய நிகழ்வுகள் சிலவற்றையும், மேற்கொண்ட நடவடிக்கைகளையும் நினைவு கூறுகிறோம்.

நன்றி ! வணக்கம் !!



J.பிரகாஷ் சிங்,
பொது செயலாளர்,
தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்.

## Our Association's Actions:

1).Memorandum submitted with Tamil Nadu Chief Minister Late Selvi.J.Jayalalitha on 28.09.2015 to construct Memorial and bronze Statue for Raja Desingh at Gingee.

2).Initiative taken to release Raja Desing's postage stamp and the same was unveiled by Tamil Nadu Chief Minister Thiru.Edappadi K.Palaniswami.

3).Conducted massive rally twice at Gingee to celebrate Raja Desingh's anniversary and Member of Legislative Assembly Shri. Masthan was invited as Chief Guest in the rally.

4).The place where the King Raja Desingh's had his last breath was cleaned and maintained with a park, Hall with electricity and water and decorated with Rajasthan Marbles with the help of the TNRBA Members own Fund which comes around 10 Lakhs. Now, it appears as Raja Desingh's beautiful Temple.

5). In Ranipet, Tamil Nadu where the queen Rani Bai sacrificed her life after the demise of her husband Raja Desingh, the lands were encroached unlawfully by the Muslims. With great effort about 1 ½ acres of land was recovered from them. Even in the Covind-19 period a huge function was conducted by our family members by decorating with flowers and thus the tribute paid to the Rani Bai.

6). Association members met Ranipet MLA Shri. Masthan on 23.07,2016 and submitted memorandum for constructing Memorial & Bronze Statue for Raja Desingh.



# MEMORIES OF TRIBUTE PAID TO RAJA DESINGH



Raja Desingh's 304th Anniversary Celebration at Gingee on 03.10.2018



# MEMORIES OF TRIBUTE PAID TO RAJA DESINGH




**Tribute to Raja Desingh during TNRBA Golden Jubilee Celebration at Hosur on 12.01.2020**



# MEMORIES OF TRIBUTE PAID TO RAJA DESINGH



**Tribute to Raja Desingh during Family Meet Gathering Function at Coimbatore on 03.01.2021**



# MEMORIES OF TRIBUTE PAID TO RAJA DESINGH



**Tribute to Raja Desingh during Family Meet Gathering Function at Coimbatore on 03.01.2021**



# MEMORIES OF TRIBUTE PAID TO RAJA DESINGH



**Tribute to Raja Desingh by Honourable Central Minister for Water Resource**
**Shri.Gajendra Singh Shekawat**
**during Sneh Milan Community Function held at**
**Hosur on 04.04.2021**

TNRBA Welcomes articles and views from members for publication in the
News Letter / Website.
Website: WWW.TNRBA.COM | E.Mail: tnrbaofficial@gmail.com

# RAJA DESINGH BIRTH DAY CELEBRATION
# YOUTH WING COMPETITION – PARTICIPANTS LIST

| S. NO. | NAME | FATHER'S NAME | DISTRICT | STD |
|---|---|---|---|---|
| 1 | K.JAISREE BAI | KESAR SINGH | PERAMBALUR | 1st |
| 2 | S.THARMENDHAR PRATHAP SINGH | M. SURESH SINGH | PANRUTI, CUDDALORE | 1st |
| 3 | B.SRI SUNDARA GIRI | R.BALAJI GIRI | THIRUCHIRAPPALLI | 2nd |
| 4 | K.Y.SWAJITH SINGH | K.YASHWANT SINGH | PANRUTI, CUDDALORE | 2nd |
| 5 | N.S.VIGNA SREE | K.N.SAKTHIVEL | THIRUCHIRAPPALLI | 3rd |
| 6 | G.HARIDHARSHAN SINGH | P.GAJENDARA SINGH | SANGARAPURAM, KALLAKURUCHI | 3rd |
| 7 | R.STELLA MARY SINGH | D.RAJA SINGH | PANRUTI, CUDDALORE | 4th |
| 8 | K.EESHVAR | R.KARTHIK SINGH | THIRUCHIRAPPALLI | 4th |
| 9 | Y.NAVEEN KUMAR SINGH | S.YUVANKUMAR SINGH | PANRUTI, CUDDALORE | 4th |
| 10 | Y.KEERTHANA SINGH | S.YUVANKUMAR SINGH | PANRUTI, CUDDALORE | 4th |
| 11 | S.SHAMIKSHA SHRI SINGH | M. SURESH SINGH | PANRUTI, CUDDALORE | 4th |
| 12 | B.BHAVISHYA | D.BOOPAL SINGH | THIRUCHIRAPPALLI | 5th |
| 13 | B.DHISHANTH | J.BALAJI SINGH | THIRUCHIRAPPALLI | 5th |
| 14 | N.S.TEJAL SREE | K.N.SAKTHIVEL | THIRUCHIRAPPALLI | 6th |
| 15 | A.THOSHIBA | K.ANAND SINGH | THIRUCHIRAPPALLI | 6th |
| 16 | H.SARULATHA SINGH | HUMAYUN SINGH | PANRUTI, CUDDALORE | 7th |
| 17 | R.GOWSHIKRAJ SINGH | S.RAVICHANDRA SINGH | CUDDALORE | 7th |
| 18 | R.JAGADESHWARAN SINGH | S.RAJESH SINGH | PANRUTI, CUDDALORE | 7th |
| 19 | B. MENAKA SINGH | BALAJI SINGH | PANRUTI, CUDDALORE | 8th |
| 20 | S.L. THARUN KUMAR | T.SEKAR SINGH | HOSUR, KRISHNAGIRI | 8th |
| 21 | J. HARINI | K. JAY KUMAR | VANIYAMBADI, THIRUPPATHUR | 8th |
| 22 | G.ANAND SINGH | GANESH SINGH | MATHUKKUR, THANJAVUR | 8th |
| 23 | J. SANDHIYA | K. JAY KUMAR | VANIYAMBADI, THIUPATHUR | 10th |
| 24 | A.ASIN BAI | K.ANAND SINGH | THIRUCHIRAPPALLI | 10th |
| 25 | R.SASI DEVI | S.RAJESH SINGH | PANRUTI, CUDDALORE | 10th |

## RAJA DESINGH BIRTH DAY CELEBRATION
## YOUTH WING COMPETITION – PARTICIPANTS LIST

| S.NO. | NAME | FATHER'S NAME | DISTRICT | STD |
|---|---|---|---|---|
| 26 | Y.NEHA SINGH | D.YOGESH SINGH | THIRUCHIRAPPALLI | 10th |
| 27 | R.SWARANA SHRI SINGH | S.RAVICHANDRA SINGH | CUDDALORE | 10th |
| 28 | M. POOJA SINGH | MAGESH SINGH | PANRUTI, CUDDALORE | 10th |
| 29 | V. KEERTHIKA BAI | K. VIJAYAKUMAR SINGH | VANIYAMBADI, THIRUPPATHUR | 11th |
| 30 | V.KASTHURI BAI | M. VIJENDHAR SINGH | MANNARGUDI, THIRUVARUR | B.Sc., |
| 31 | D. KAMLESH SINGH | DHASHPRAKASH SINGH | PANRUTI, CUDDALORE | |
| 32 | D. BATHRESH SINGH | DHASHPRAKASH SINGH | PANRUTI, CUDDALORE | |
| 33 | R. RACHANA SINGH | JAI SHANKAR SINGH | PANRUTI, CUDDALORE | |
| 34 | K. HARSHA VARDHINI | KUBER SINGH | KANAIKUPPAM, VILLUPPURAM | |
| 35 | K. KRISHNAN | KUBER SINGH | KANAIKUPPAM, VILLUPPURAM | |
| 36 | S. GOKUL NATH | V.SATHEESH KUMAR | SALAMEDU, VILLUPPURAM | |



**- END -**